



அமரர்

# நடராசா தவக்குமார்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

"நினைவுமலர்"

01.12.2022

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01ஆம் ஆண்டு நினைவாக



# அமரர்

# நடராசா தவக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதபுரத்தைப் பிறப்பிடமாகவும்,

வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# நடராசா தவக்குமார்

அவர்களின்

# நினைவு மலர்

## 01.12.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அகிலமதில் எம்மையெல்லாம்
அல்லல் இன்றி
இன்பமாய் வாழவைக்க
அல்லும் பகலும்
அயராது பாடுபட்டு
ஊன் உறக்கம் தனை மறந்து
இரவைப் பகலாக்கி
இரத்தத்தை வியர்வையாக்கி
தன்னை வருத்தி தரணியிலே நாம் வாழ
உழைத்த எங்கள் அன்புத் தெய்வம்
எம்மை எல்லாம்
மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
இறைவனடி சென்று விட்டார்.
அன்னாரை எம் இதயக் கமலத்தில் நிறுத்தி
நெஞ்சுருகக் கண்ணீர் சிந்தி கைதொழுது
நெய்விளக்கு ஏற்றிடும் இவ் வேளையில்
அவர் பிரிவு குறித்து வெளியிடப்படும்
இந் நினைவு மலரை
அவரது பாதார விந்தங்களில் வைத்து
சமர்ப்பணம் செய்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



இவ்வண்ணம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளுடன்



தோற்றம்
22.12.1963

அமரர்

மறைவு
11.12.2021

# நடராசா தவக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

நீள நினைந்து அடியேன் உமை
நித்தலும் கை தொழுவேன்
வாள் அன கண் மடவாள் அவள் வாடி வருந்தாமே,
கோளிலி எம்பெருமான்!
குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான்,
அவை அட்டித்தரப் பணியே! 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும்
இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன்
குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக
வேண்டுவனே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாதே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அமரத்துவமடைந்த எங்கள் குலவிளக்கு*
*நடராசா* ***தவக்குமார்***
*அவர்களின்*

# வாழ்க்கை வரலாற்றின் சாராம்சம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இலங்கைத் திருநாட்டின் நீர் வளமும், நில வளமும் கொண்ட இராமநாதபுர நகரிலே காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்ட நடராசா அன்னமுத்து தம்பதியர்களின் செல்வ மகனாக 1963ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22ஆம் திகதி அன்று தவக்குமார் அவனியிலே அவதரித்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியையும், உயர்கல்வியையும் கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் விவசாயத்தில் அளப்பரிய ஈடுபாடு கொண்டு விவசாயம் செய்து வந்தார். பருவ வயதில் தேவராசா செல்வராணியின் மகளான லலிதாரஞ்சினியை 1983ஆம் ஆண்டு மணம் முடித்து இல்லற வாழ்வை இனிதாக நடத்தி வந்தார். இதன் பயனாக இவர்களுக்கு ஐந்து பிள்ளைச் செல்வங்கள் உள்ளனர்.

பின்பு 1991ஆம் ஆண்டு கரைச்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் கிளை முகாமையாளராகக் கடமையாற்றி வந்தார். இவர் விவேகத்துடனும், ஆர்வத்துடனும் தனது வேலையை செய்து வந்தார். மேலும் கடவுள் நம்பிக்கையை அதிகமாகக் கொண்டவர். இவரது பிள்ளைகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவரஞ்சினி சுதாகரையும்
தவரதி சுகந்தனையும்
தவறஞ்சன் பிரியாவையும்
தவரதன் வினோஜாவையும்
தவரூபன் தர்சினியையும்

மணந்து சிறப்பாக வாழ்க்கை நடாத்துவதைக் கண்டு மகிழ்ந்து வந்தார். இதன் பயனாக ஒன்பது பேரப்பிள்ளைகளைக் கண்டு அவர்களுடன் மகிழ்ச்சியுடன் இருந்து வந்தார். முறையே சபீஸ், கரீஸ்,ஜஸ்னவி, மானசி, நிதுஷா, டனுஜா, மோனிஸன், டிலைக்ஷன், லிக்ஷனா என்ற பேரப்பிள்ளைகளையும் கண்டார்.

சில காலம் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கண்டுகொண்டார்.

இவரின் இழப்பு என்றும் எங்கள் மனதைவிட்டு அகலாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

***ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!***

**வார்த்தைகள் இல்லாத வடிவம்**
**அளவுகோலே இல்லாத அன்பு**
**சுயநலம் இல்லாத இதயம்**
**வெறுப்பே காட்டாத முகம்**
**நம் அப்பா...........**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைத்து நின்ற நினைவுகளுடன்
# அமரர்
# நடராசா தவக்குமாரின்
# நினைவலைகள்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் வாய் மொழிக்கமைய இப்பூவுலகில் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகிய இவை நான்கு தீக்குணங்களின்றி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து காட்டியவன் தான் அமரராகிவிட்ட நடராசா தவக்குமார் என்ற பெருந்தகை. வன்னிப் பெருநிலப்பரப்பின் பெருமை சேர்ந்த கிளிநொச்சி மாநகரின் எழுவான் திசையில் வேளாண் செய்கையில் உயர்ந்து, வந்தவர்களையெல்லாம் வாழ வைக்கும் மக்களைக் கொண்ட வளமான இராமநாதபுரம் என்னும் ஊரில் 1963இல் காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்ட நடராசா அன்னமுத்து தம்பதியர் செய்த பெரும் பயனாக பெயருக்கேற்ற குணமுடைய தவக்குமார் வந்துதித்தான்.

ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு சிறப்புள்ளது. இவர்களது பூர்வீக காரைநகரத்தவர்கள். வாணிபத்தில் வல்லவர்கள். இறைபக்தியிலும் மேலானவர்கள் அதே போல தவக்குமாரும் வாணிபத்தில் கை தேர்ந்தவர். ஆனால் வள்ளுவரின் வாய்மொழிக் கமைய
"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும்
தம்போல் செயின்" அதாவது பொருட்களை வாங்கி விற்கும் நிலையங்களில் வணிகர்கள் பிறர் பொருட்களையும் தம் பொருட்கள் போல் எண்ணி மிகையும் குறையும் இல்லாமல் வர்த்தகம் செய்வதே வணிகச் சிறப்பாகும். இந்த வகையில் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவக்குமாரின் வணிகச் செயற்பாடு இருந்ததையும் நான் கண்டேன்.

நான் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 1992ஆம் ஆண்டு பொது முகாமையாளர் பணி ஏற்றதும் இராமநாதபுரம் கிழக்கு கிளைக்கு வந்த போது அங்கு திரு நீற்றுப்பூச்சுடனும், பொட்டுடனும் தவக்குமார் என்ற பெயருடைய சுறுசுறுப்பான இளைய பணியாளரைக் கண்டேன். முதல் சந்திப்பிலேயே வாணிபத்தை மேம்படுத்த செய்யவேண்டியவை, திட்டமிடப்படவேண்டியவற்றை அடுக்கடுக்காக சொல்லி முடித்தார். அவரது புதிய முன்மொழிவுத்திட்டம் தான் வட்டக்கச்சி சந்தை வளாகத்துள் "மக்கள் கடை" அமைத்தல். ஆரம்பிக்கப்பட்ட மக்கள் கடைக்கு தவக்குமார் தான் முகாமையாளர். அப்போது தலைமைச் சங்கத்திற்கு இக்கடை வருமானம் அதிகமானது. கடமை, கண்ணியம், கடின உழைப்பு, நேரகாலம் பாராது தொழில் தந்த சங்கத்திற்காக அயராது பாடுபட்டார். இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்து எம் பிரதேசத்திற்கு வந்த போது நிவாரணப்பணிகளை இவரும் ஏனையபணியாளரும் நேரக்கணக்கின்றிச் செய்தார்கள். அரிசி ஆலையை நிறுவுதல் இப்பகுதியில் உற்பத்தியாகிய நெல் கொள்வனவு செய்தல் மற்றும் இராமநாதபுரம் கிழக்குக் கிளையில் எண்ணெய் ஆலைகள் சிறுகைத்தொழில் முயற்சிகள் எல்லாவற்றையும் முன்னின்று செயற்படுத்தினார். இராமநாதபுரம் கிளையில் பெரிய அளவான அரிசி ஆலை நெல் காயவைக்கும் தளம் ஆகியவற்றை நிறுவ மேசனாகவே செயற்பட்டுமுள்ளார். தொடர் யுத்த சூழல் பொருளாதாரத்தடை இவற்றை ஈடு செய்ய சேதனப்பசளை "முத்தமுது" என்ற பெயரில் இச்சங்கம் தயாரிக்கவும் முழு மூச்சாக உழைத்தார்.இதில் நல்ல வெற்றி கிடைத்தது.

உணவு உற்பத்தி செய்ய வேண்டியதற்காக சங்கமாக மாயவனூரில் 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு விவசாயப் பண்ணையை நடாத்தியது. வரட்சியில் செய்பயிர்கள் வாடின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலுள்ள புழுதி ஆற்றினை மறித்தால் நீர்த்தட்டுப்பாடு நீங்குமென தவக்குமார் உட்பட்ட பணியாளர்கள் கண்டு பிடித்து சங்கநிர்வாகத்தின் அனுமதியுடன் ஆற்றை மறிக்க ஏற்பாடாகியது. ஆற்றை மறித்து நீர் தேங்கியதும் அத்தேங்கிய நீரில் தமது மனம் குளிர தவக்குமாரும் நீந்தி மகிழ்ந்தார். தொடர் முயற்சியால் 2001ஆம் ஆண்டு ஆவணி மாதம் 23ஆம் திகதி இக்குளக்கட்டுகான ஆரம்ப நிகழ்வு. இதற்கான சமயச் சடங்குகள் எல்லாம் ஆசாரப்படி தவக்குமார் தான் செய்தார். இன்று புழுதியாற்றுத் தேக்கம் இவ்வளவு பயன் கொடுப்பதற்கு தவக்குமாரின் தூரநோக்கான சிந்தனையும் காரணம்தான். பொது வாழ்வில் முதன்மை பெற்ற நல்லமனம், நற்சிந்தனை கொண்ட தவக்குமாருக்கு அவரது இருபதாவது வயதில் திருமணம். இவருக்கு இல்லத்தரசியாக வாய்த்தவர் தான் தேவராசா லலிதாரஞ்சினி. இவரும் இறைபக்தி , கணவரது பொது வாழ்விலும் உறுதுணையாக இருந்துள்ளார். இவர்கள் இருவரும் சைவ சமயத்தவர். விரதங்கள் அத்தனையும் நோற்பார்கள். இவர் களும் இவர்களது பிதா,மாதா செய்த பூர்வ புண்ணிய பயன்களும் தான் இவர்களுக்கு முத்தான ஐந்து மழலைகள். அவர்கள் ஐவரும் திருமணமாகி நன்மருமக்கள் ஐவருக்கும் பிள்ளைகள் மனைவி மக்கள் பேரப்பிள்ளைகளுடன் இன்புற்றிருக்கும்போது தான் உடல் நலக்குறைவு. தன் உடம்பைக் கவனிக்காத பொது உழைப்பும் இதற்குக் காரணமாகலாம். தனது 58 ஆவது வயதில் அமராகிவிட்டார்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல் என்னும் சொல்" என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கமைய இவரது நன் மக்கள் பண்பானவர்களாகவும் தந்தையைப் போன்ற மன இயல்பு உள்ளவர்களாகவும் தந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் நிலைத்து நிற்க வாழ்கின்றார்கள்.

இவரது இழப்பு அவரது குடும்பத்தவர்களுக்கு மட்டுமல்ல கூட்டுறவுத்துறை நண்பர்களுக்கும் பேரிழப்புத்தான். பிறந்தவர் எவரும் நிலைத்து நின்றதில்லை. "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்ற குறளிற்கமைய உறங்கிய உயிர் மீண்டும் உங்கள் குடும்பத்தில் என்றோ வந்து சங்கமமாகும் என ஆறுதலடையுங்கள்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

தவக்குமாரின் நினைவுடன்
சிவக்கொழுந்து புவனேஸ்வரன்
முன்னாள் பொது முகாமையாளர்,
சமாதான நீதவான்,
பிரதேச சபை உறுப்பினர், கரைச்சி.

தேடல் உள்ளவரை
வாழ்க்கைக்கு அர்த்தம்
இருக்கும் என்று சொல்வாயே
அப்பா

அர்த்தமற்ற வாழ்வினை அர்த்தம்
உள்ளதாக மாற்ற நானும்
தேடுகிறேன்.

ஆனால் நீ மட்டும்
கிடைக்கவில்லையே
அப்பா...!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயர் பாடி

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப் போல்
மாயக் கண்ணன் தூங்குகிறான் தாலேலோ - அவன்
வாய் நிறைய மண்ணை உண்டு
மண்டலத்தைக் காட்டிய பின்
ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ
ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ

பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னம்வைத்து
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ -அந்த
மந்திரத்தில் அவன் உறங்க மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ (ஆயர் பாடி)

நாக படம் மீதில் அவன் நர்த்தனங்கள் ஆடியபின்
தாகமெல்லாம் தீர்த்துக்கொண்டான் தாலேலோ - அவன்
மோக நிலைகூட ஒருயோக நிலை போலிக்கும் யார்
அவனைத் தூங்க விட்டார் ஆராரோ
யார் அவனைத் தூங்க விட்டார் ஆராரோ (ஆயர் பாடி)

கண்ணன் அவன் தூங்கி விட்டால் காசினியே தூங்கி விடும்
அன்னையரே துயில் எழுப்ப வாரீரோ அவன்
பொன்னழகை பார்ப்பதற்கும்
போதை முத்தம் பெறுவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ (ஆயர் பாடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்து
உண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்பு



### *விநாயகர் துதி*

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

வேண்டுதற் கூறு
காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

**அமரரிடர் தீர அமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி**
**(நூல் நிலைமண்டில ஆசிரியப்பா)**


சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர்  குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டகுடகு  டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர


பழமுதிர்ச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ்டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்எரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்



திருச்செந்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்


நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் – சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்


செல்வச் சந்நிதி

முற்றிற்று
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையார் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பின்ளையார்)

ஆறுமுக வேலவனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீரத்துவைக்கும்
(பின்ளையார்)

மஞ்சளிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
(பிள்ளையார்)

அவல் பொரியும் கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றித் தின்னுவார் கண்ணை மூடித் தூங்குவார்
(பிள்ளையார்)

கலியுகத்தின் விந்தைகளை காணவே அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார்
ஜெய கணேச (பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதர் முடி மேலிருக்கும்

நாதர் முடி மேலிருக்கும் நல்ல பாம்பே உனக்கு
நல்ல பெயர் வைத்தவர் யார் சொல்லு பாம்பே
ஆதி சிவன் தலை அமர்ந்த ஆணவமா அவன் அங்கமெல்லாம்
விளையாடும் தைரியமா (நாதர் முடி)

ஊர் கொடுத்த பால் குடித்து உயிர் வளர்ந்தாய் பால்
உண்ட சுவை மாறும் முன்னே நன்றி மறந்தாய்
வஞ்ச மற்ற தொண்டனுக்கே வஞ்சனை செய்தாய் - அவர்
பிஞ்சு மகன் நெஞ்சினுக்கே நஞ்சு கொடுத்தாய்
பெயருக்குத் தகுந்தாற் போல் மாறி விடு எங்கள்
பிள்ளையை மறுபடியும் வாழவிடு
நெஞ்சம் மாறி விடு பிள்ளையை வாழ விடு
நெஞ்சம் மாறி விடு பிள்ளையை வாழவிடு

சங்கமமர்ந்தொரு முத்தமிழ் பாடிய சங்கரன் மீதினில் ஆணை
சங்கப் புலவர்கள் நாவிலடங்கிய செந்தமிழ் மீதினில் ஆணை
மங்கலக் குங்குமம் மஞ்சம் நிறைந்த சங்கரி மீதினில் ஆணை
மாதொரு பாகன் சூடிய நாக பாம்பே உன் மேல் ஆணை
தேவன் மீதில் ஆணை அவன் திருவடி மீதும் ஆணை
திருமறை மீதில் ஆணை என் திரு நாவின் மீதும் ஆணை
மண் மேல் ஆணை சொல்மெல் ஆணை
என் மேல் ஆணை உன் மேல் ஆணை நாதர் முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் தோத்திரங்கள்

## வெற்றிலையில் மாலை

வெத்தலையில மாலை கட்டுங்க மால கட்டுங்களே - உங்க
வேதனையை சொல்லி சொல்லி மால கட்டுங்களே
துளசி இல கொழுந்தெடுத்து கோர்த்து கட்டுங்களே
தோத்திரத்த சொல்லி சொல்லி மாலை கட்டுங்களே
வெத்தலயில

கோடி பணம் கேட்பதில்லை மாருதி ராஜா -அவன்
கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா
ராம ஜெயம் சொன்னிங்கன்னா வந்து நிற்பானே - தினம்
ராம நாம சாமி பேரை பாடி நிற்பானே
வெத்தலயில

ஆசையெல்லாம் வேரறுத்த அற்புதசாமி -அவன்
ஓசை தரும் மணி இருக்கும் வால் கொண்ட சாமி
காத்தடிச்சா புயலடிச்சா கலங்கிடலாமா - அந்த
கட்டித்தங்க மனசிருக்க தவிப்பது ஏம்மா
வெத்தலயில்

பொட்டுவச்சு பொட்டுவச்சு பூசை செஞ்சாலே - அவன்
எட்டுவச்சு வாசல் கதவ தட்டிடுவானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே - அவன்
மெல்ல வந்து தாளமிட்டு கேட்டிருப்பானே
வெத்தலயில

கும்மி கொட்டி கும்மி கொட்டி கும்மி போடு -எங்க
கோமகனாம் மாருதிக்கு சரணங்கள் பாடு
நம்பி வந்து நம்பி நின்று நல்லதக் கேளு -மனம்
வெம்பி வெடிக்க தேவையில்ல நன்மை கையோடு
வெத்தலயில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர அனுமான்

சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக்க சேவிக்க நலம் தருவான்
அந்தமும் ஆதியும் கடந்து நின்று
அன்பரைக் காத்திட முன்வருவான் (சுந்தர)

ரகு குலம் காத்திட்ட பெருவீரன்
இராமனுக் கினிய பெருந்தொண்டன்
கலங்கிடும் கலியுக மக்களுக்கு
கலங்கரை விளக்காய் வந்திடுவான் (சுந்தர)

கலங்கரை விளக்காய் அனுமானை
அனுதினம் பாடி நாம் பணிந்தால்
அட்டமா சித்தி கைகூடும்
அல்லல் வினைகள் பறந்தோடும் (சுந்தர)

தீயதைப் பாரினில் அழிப்பதற்கு
திரு நிறை பக்தியை வளர்ப்பதற்கு
கலியுகம் தன்னில் தனித்தெய்வம்
சுந்தர அனுமான் அவன் தானே (சுந்தர)

சனிதோறும் அனுமானைப் பணிந்து நின்றால்
சனியெனும் ஈஸ்வரன் அவன் தானும்
அன்புடன் அவனிடம் கட்டுப்பட்டால்
அன்பான வாழ்வு அவன் தருவான் (சுந்தர)

பக்தியை வளர்த்திட ராமனையும்
பாரினில் கை கண்ட அரு மருந்து
அரு மருந்தினை நீ அருந்தி
அவன் பிறப்பினை அறிந்திடுவாய் (சுந்தர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் தோத்திரங்கள்

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு நாங்க
கார்த்திகை முதல் தேதி மாலை இட்டோம்
ஐயப்பா ஐயப்பா என்றே சொல்லி நாங்க
ஆறுவாரம் தானே நோன்பிருந்தோம்

(கன்னி)

எங்க குருசாமி துணைகொண்டு அவர் பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சுமத்துகிட்டு வந்தோமய்யா
ஆறு படை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திரையாய் நடந்து வந்தோமய்யா

(கன்னி)

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமரி வரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமய்யா
எருமேலிபேட்டை துள்ளி வாவரையே வேண்டிகிட்டு
பேரூர் தோட்டில் பொரிபோட்டு வந்தோமய்யா

(கன்னி)

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதாமலை ஏறிக்கிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமய்யா
பமபையிலே குளிச்சிப்புட்டு பாவங்களைத் தொலைச்சுப்புட்டு
சபரிமலை ஏறிக்கிட்டு வந்தோமய்யா

(கன்னி)

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூர ஜோதிதனைக் கண்டோமய்யா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உம் மகிமை அறிந்தோமய்யா

(கன்னி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமுடி தாங்கி ஒருமனதாகி

இருமுடிதாங்கி ஒருமனதாகி குருவெனவே வந்தோம்.
இருவினை தீர்க்கும் எமனையும் வெல்லும்
திருவடியைக் காணவந்தோம்

பல்லவி

பள்ளிக்கட்டு சபரி மலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்பா
ஐயப்பா சாமியே
நெய்யபிஷேகம் ஸ்வாமிக்கே
கற்பூர தீபம் ஸ்வாமிக்கே
ஐயப்பமார்களும் கூடிக்கொண்டு
ஐயப்பனை நாடி சென்றிடுவார்
சபரிமலைக்கே சென்றிடுவார் ஸ்வாமி

அனுபல்லவி

கார்த்திகை மாதம் மாலையணிந்து
நேர்த்தியாகவே விரதமிருந்து
பார்த்த சாரதியின் மைந்தனே உனை
பார்க்க வேண்டியே தவமிருந்து
இருமுடி எடுத்து எருமேலி வந்து
ஒருமனதாகிப் பேட்டை துள்ளி

அருமை நண்பராம் வாபரை தொழுது
ஐயனின் அருள் மலை ஏறிடுவார்
அழுதை ஏற்றம் ஏறும்போது
அரிஹரன் மகனைத் துதித்துச் செல்வார்
வழி காட்டியே வந்திடுவார் ஐயன்
வன்புலி ஏறி வந்திடுவார்
கரிமலை ஏற்றம் கடினம் கடினம்
கருணைக் கடலும் துணை வருவார்
கரிமலை இறக்கம் வந்தவுடனே
பெருநதி பம்பை கண்டிடுவார் ஸ்வாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை நதிபோல் புண்ணிய நதியாம் பம்பையில் நீராடி
சங்கரன் மகனைக் கும்பிடுவார்
சஞ்சலமின்றி ஏறிடுவார்
நீலி மலை ஏற்றம் சிவபாலனும் ஏற்றிடுவார்
காலமெல்லாம் நமக்கே அருட் காவலனாயிருப்பார்
தேகபலம்தா என்றால் அவர் தன் தேகத்தைத் தந்திடுவார்
பாத பலம்தா என்றால் அவர்தன் பாதத்தைத் தந்திடுவார் நல்ல
பாதையைக் காட்டிடுவார் ஸ்வாமி

சபரி பீடமே வந்திடுவார்
சபரி அன்னையைப் பணிந்திடுவார்
சரங்குத்தி ஆலில் கன்னிமார்களும்
சரத்தினைப் போட்டு வணங்கிடுவார்
சபரிமலை தனை நெருங்கிடுவார்
பதினெட்டுப்படி மீது ஏறிடுவார்
கதியென்றவனைச் சரணடைவார்
மதி முகம் கண்டே மயங்கிடுவார் - ஐயனைத்
துதிக்கையில் தன்னையே மறந்திடுவார்
பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளிளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்பா சுவாமியே ஐயப்போ
சரணம் சரணம் ஐயப்போ சாமி சரணம் ஐயப்போ - ஸ்வாமி

---

## வாழ்க்கையில் மூன்று விதமான மனிதரை மறக்காது இருங்கள்

- உங்கள் கடின காலத்தில் கரம் கொடுத்துக் காத்தோர்.
- உங்கள் கடின காலத்தைக் கண்டும் காணாது போனோர்.
- உங்கள் கடின காலத்தை தோற்றுவித்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியல

ஐயப்பா உன்னை நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால இருக்க முடியல

வாபர் சாமி நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால இருக்க முடியல

எரிமேலி பேட்டைத்துள்ளல் மறக்கமுடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

அழுதா நதி கல்லெடுத்தேன் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

கறுப்புசாமி என்னை நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

பொன்னு பதினெட்டுப்படி தொட்டதை மறக்கமுடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

காந்தமலை ஜோதிய மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தள்ளாடி தள்ளாடி

தள்ளாடி தள்ளாடி நடை நடந்து நாங்கள்
சபரிமலை நோக்கி வந்தோமய்யா (தள்ளாடி)

கார்த்திகை நல்ல நாளில் மாலையும் போட்டுக்கிட்டு
காலையிலும் மாலையிலும் சரணங்கள் சொல்லிக்கிட்டு
(சாமியே ஐயப்பா! ஐயப்பா! சாமியே )
சரணங்கள் சொல்லிக்கொண்டு வந்தோமய்யா நாங்கள்
சபரி மலை நோக்கி வந்தோமய்யா நாங்க
சபரி மலை நோக்கி வந்தோமய்யா (தள்ளாடி)

இருமுடியைக் கட்டிக்கிட்டு இன்பமாய் பாடிக்கிட்டு
ஈசன் மகனே உந்தன் இருப்பிடத்தை தேடிக்கிட்டு
பேட்டைகளும் துள்ளிக்கிட்டு வேஷங்களும் போட்டுக்கிட்டு
வேடிக்கையாக நாங்கள் ஆட்டங்களும் ஆடிக்கிட்டு
(சாமி திந்தகத்தோம். ஐயப்பா திந்தகத்தோம்) (தள்ளாடி)

காணாத காட்சியெல்லாம் கண்குளிரக் கண்டுக்கிட்டு
காடு மலைகளெல்லாம் கால் நடையாய்த் தாண்டிக்கிட்டு
பம்பையில் குளித்து விட்டு பாவமெல்லாம் போக்கிக்கிட்டு
பக்தரெல்லாம் கூடி நின்று பஜனைகள் செய்துக்கிட்டு
(சாமியே ஐயப்பா! ஐயப்பா சாமியே என)
பஜனைகள் செய்துக்கிட்டு வந்தோமய்யா (தள்ளாாடி

நீலிமலை ஏற்றத்திலே நின்று நின்று ஏறிக்கிட்டு
நெஞ்சம் உருகி உன்னை நினைச்சுமே பார்த்துகிட்டு
படியேறிப் போகும் போது பாங்கான காய் உடைத்து
பாலனான உன்னையே பார்த்துப் பார்த்து சொக்கிக்கிட்டு
நெய்யிலே குளிக்கும்போது நேரிலேயே பார்த்துகிட்டு
ஐயப்பா சரணம் என்று ஆர்ப்பரித்துப் பாடிக்கிட்டு
(தள்ளாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே மணக்குது

சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா
சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா
சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா
எங்கே மணக்குது சந்தனம் எங்கே மணக்குது
ஐயப்ப சாமி கோயிலிலே சந்தனம் மணக்குது
என்ன மணக்குது மலையில் என்ன மணக்குது
இன்பமான ஊதுவத்தி எங்கே மணக்குது (எங்கே)

என்ன மணக்குது மலையில் என்ன மணக்குது
நீல மணிகண்டன் சந்நிதியில் நெய்யும் மணக்குது
திருநீறும் மணக்குது - பன்னீரும் மணக்குது
ஆண்டவனின் சந்நிதியில் அருளும் மணக்குது
ஐயன்மார்கள் உள்ளத்திலே அன்பும் மணக்குது (எங்கே)

பள்ளிக்கட்ட சுமந்துக்கிட்டா பக்தி பிறக்குது
அந்த பனிமலையில் ஏறிடவே சக்தி இருக்குது
பகவானை பாத்துப்புட்டா பாவம் பறக்குது
பகவானை பாத்துப்புட்டா பாடம் முடியுது
பதினெட்டாம் படிதொட்டா வாழ்வும் இனிக்குது (எங்கே

பேட்டை துள்ளி ஆடும் போது மனமும் துள்ளுது
ஐயன் பெரும் புகழைக் காண உள்ளம் ஆசை கொள்ளுது
காட்டுக்குள்ளே சரணகோஷம் வானைப் பிளக்குது
சாமியே சரணம் ஐயப்பா
வீட்டை மறந்து மக்கள் கூட்டம் காட்டில் இருக்குது (எங்கே)

பூங்காவனத் தோப்புக்குள்ளே பவனி வருகிறான்
ஐயன் வேங்கை மேல் ஏறி வந்து நலமும் கொடுக்கிறான்
நோன்பிருந்து வருவோரைக் காத்து நிற்கிறான்
ஓங்கார நாதத்திலே எழுந்து வருகிறான் (எங்கே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோகினி தன் மோகன...

மோகினி தன் மோகன பாலகனல்லே
அந்த மாமலையில் ஜொலிக்கும் மாணிக்கமல்லே (2தடவை
மகிஷியை வதம் செய்த மன்னவனல்லே
நாங்கள் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் நீயல்லே
பத்தள ராஜாவின் பாலகனல்லே
எங்கள் பரந்தாமன் புத்திரனவன் நீயும் மாணிக்கமல்லே
(மோகினி)

லல்லல்னெ லாலல்லோன ஐயப்பனல்லே
புலிப்பால் கொணர்ந்த புண்ணியனல்லே
மன்னாதி மன்னன் நீயும் மதிமுகனல்லே
மாதா பிதா குரு தெய்வம் எல்லாம் நீயல்லே - ஐயப்பா
மாதா பிதா குரு தெய்வம் எல்லாம் நீயல்லே
மோகினி

---

## பிள்ளையார் அப்பனே

பிள்ளையார் அப்பனே பிள்ளையார் அப்பனே
பிழை எல்லாம் பொறுத்துக்கட பிள்ளையார் அப்பனே (2)
பிள்ளையார்

தெருவெல்லாம் குடியிருக்கும் பிள்ளையார் அப்பனே
தேங்காய உடையுங்கட பிள்ளைக்காக
அரச மரத்தடியில் அமர்ந்திருக்கும் அப்பனே – நீ
ஆதிமுதலானவன்டா பிள்ளையார் அப்பனே
(பிள்ளையார்)

ஊரெங்கும் கோவில் கொண்ட பிள்ளையார் அப்பனே – உலகம்
உனக்குள்ள அடக்கமட பிள்ளையார் அப்பனே
தாய் தந்தை வலம் வந்த பிள்ளையார் அப்பனே – தம்பி
போட்டியிலே பழம் வென்ற பிள்ளையார் அப்பனே
ஆறு முகன் காதலுக்கு துணை புரிந்த அப்பனே – ஏழை
எங்களை வாழ வைக்கும் பிள்ளையார் அப்பனே
(பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தகடன் தீரவில்லை

வந்தகடன் தீரவில்லை சொந்தக்கடன் ஓயவில்லை
எந்தக்கடன் தீர்ப்பதற்கு என்னைப் படைத்தாய் - ஐயா
ஏழைகள் அழுவதற்கோ கண்ணைப்படைத்தாய் - ஐயா
ஐயப்பா ஐயப்பா

வாழ்வதற்கு பட்ட கடன் அப்பப்பா - இங்கு
வருவதற்கு கடன் வாங்கி வந்தேனப்பா
வந்தகடன் தீரவில்லை
தாய்ப்பாசம் தந்தைக் கடன் தீராது
ஒரு ஜென்மம் உழைத்தாலும் போதாது
தோள் சுமந்து தந்தைக் கடன் தீராது
என்னும் மறு ஜென்மம் எடுத்தாலும் மறையாது
கடலிடம் வானம் கடன் கொண்டு நீரை
மழையாக பொழிந்தாலும் நிறையாது
சபரிமலை நாதன் கருணையின் கடனை
கண்ணீரால் அணைத்தாலும் அணையாது
ஐயப்பா மெய்யப்பா

வந்தகடன் தீரவில்லை

பொன் பொருள் வாங்கி குவித்தாலும்
பொன்னம்பல கடன் தீர வழி ஏது
கண்ணீரை தண்ணீராய் இறைத்தாலும்
ஜென்ம பாவம் கடன் சொல்லி மாளாது
இருமுடி தாங்கி திருவடி நாடும்
கடன் தீர்க்க வருடங்கள் போதாது
வரும் ஜென்மம் எல்லாம் வனம் தாண்டி
வந்து பணிந்தாலும் கடன் பாரம் ஓயாது
ஐயப்பா மெய்யப்பா

வந்தகடன் தீரவில்லை ஐயப்பா ஐயப்பா
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமுடியை சுமந்து வந்தேன்

இருமுடியை சுமந்து வந்தேன் இரக்கமில்லையா
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா

அழுதையிலே குளித்து வந்தேன் அறியவில்லையா
அருகே ஓர் கல்லடுத்தே வைக்கவில்லையா
கரிமலையில் ஏறிவந்தேன் காணவில்லையா -அந்த
கருடன் என்னைக் கண்டதாகச் சொல்லவில்லையா

பம்பையில் குளித்து வந்தேன் பார்க்கவில்லையா
பம்பாநதி போஜனம் நீ அருந்தவில்லையா
பம்பையிலே விளக்கெடுத்தேன் காணவில்லையா
பகவானே உனக்கு கூட சாட்சி தேவையா

பதினெட்டுப் படிகளேறி வரவுமில்லையா - நான்
படித்தேங்காய் உடைத்த சப்தம் கேட்கவில்லையா
கொடிமரத்தை சுற்றிவந்தேன் காணவில்லையா - அங்கே
கூடிநின்ற ஜனங்களைப் போய்க் கேட்டுப்பாரய்யா

நெய்யபிஷேகம் செய்தேன் நினைவுமில்லையா - நான்
மெய்யுருகிப் பாடியதும் கேட்கவில்லையா
ஐயா உன் சரணமென்றே கூறவில்லையா -நீ
விஸ்வமெல்லாம் காத்தருளும் ஜோதியல்லவா

இருமுடிப் பிரியனே சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டுப் பாடவா

தாலாட்டுப் பாடவா
தாளம் பல போடவா
கோலாட்டம் அடிக்கவா
கும்மி பல கொட்டவா (தாலாட்டு)

அச்சங்கோவில் அரசனாம்
அச்சம் தீர்க்கும் தெய்வமாம்
ஆரியங்காவு ஐயனாம்
ஆதரிக்கும் தெய்வமாம் (தாலாட்டு)

குளத்துப்புழைப் பாலனாம்
குறைகளையும் தீர்ப்பவனாம்
எருமேலி நாதனாம்
எங்கள் குல தெய்வமாம் (தாலாட்டு)

வாபர் சுவாமி தோழனாம்
வன்புலியின் வாகனனாம்
காளை கட்டி நாதனாம்
காத்தருளும் தெய்வமாம் (தாலாட்டு)

அழுதமலை ஏற்றமாம்
அழுதமலை இறக்கமாம்
கரிமலையின் ஏற்றமாம்
கரிமலையின் இறக்கமாம் (தாலாட்டு)

பம்பை யாளும் சோதியாம்
பந்தளத்து வேந்தனாம்
நீலிமலை ஏற்றமாம்
நித்திய பிரம்மச் சாரியாம் (தாலாட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் கறுப்பன் சாமியாம்
பெரிய கறுப்பன் சாமியாம்
பதினெட்டாம் படிவானான்
பக்தர் குறை தீர்ப்பானாம் (தாலாட்டு)

ஜெகதி சேகப் பிரியனாம்
நீலவஸ்திர தாரியாம்
மாளிகைப் புரத் தம்மையாம்
பஞ்சமாதா தேவியாம்

காந்தமலை ஜோதியாம்
காத்தருளுந் தெய்வமாம்
காத்தமலை ஜோதியாம்
காத்தருளும் தெய்வமாம் (தாலாட்டு)

தாலாட்டுப் பாடவா
தாளம் தட்டி ஆடவா
கோலாட்டம் அடிக்கவா
கும்மி பல கொட்டவா (தாலாட்டு)

அன்பான அம்மாவும் தோழமையான
அப்பாவும் கிடைத்த குழந்கைதகள் யாரும்
"தடு" மாறியதும் இல்லை
"தடம்" மாறியதும் இல்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்திய ஜோதி

சத்திய ஜோதி தெரியுதையா
நித்திய வாழ்வு புரியுதையா
சாஸ்தா ஆலயம் தெரியுதையா
சங்கடமெல்லாம் மறையுதையா (சத்திய)

மாமலை ஏறிப் போகையிலே
மனதில் இன்பம் தோன்றுதையா
சபரி காட்டில் நடக்கையிலே
சாந்தி நிறைந்து தோன்றுதையா (சத்திய)

பதினெட்டாம் படிகள் தாண்டயிலே
பக்தியும் எல்லையைத் தாண்டுதையா
பந்தளக் குழந்தையைப் பார்க்கையிலே
சிந்தையில் சொர்க்கம் தோன்றுதையா (சத்திய)

ஐயனை மனதில் நினைக்கையில்
ஐயம் எல்லாம் மறையுதையா
மகரஜோதியைக் காண்கையிலே
மனதில் இன்பம் தோன்றுதையா (சத்திய)

ஓரடி ஈரடியாய் நடந்து வந்தோம்
ஒவ்வொரு மலையாய் கடந்து வந்தோம்
இருமுடி தலையில் சுமந்து வந்தோம்-உன்
திருவடி துணையென்று நாடி வந்தோம் (சத்திய)

சரணம் சரணம் ஐயப்பா சபரி கிரீசா ஐயப்பா
சாந்த சொரூபா ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பனே துணை

விருத்தம்

அழுகின்ற பிள்ளைக்குத் தாயே துணை
மயங்கிடும் மனதுக்கு மந்திரம் துணை
ஊமைக்கும் செவிடுக்கும் பாவம் துணை
பாவமோ புண்ணியமோ ஐயப்பனே துணை

சரணம் 1

ஐயப்பனே துணை நமக்கு ஐயப்பனே துணை
ஏழை என்பவன் யாருமில்லை ஐயப்பனே துணை
அநாதை என்பவன் யாருமில்லை ஐயப்பனே துணை
வீட்டை மறந்து காட்டுக்குப் போவோம் ஐயப்பனே துணை
கன்னிச்சாமிகள் காலாற நடக்க ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

சரணம் 2

அஞ்சு மலைகளும் ஏற்றுக்கொள்ளுமோ ஐயப்பனே துணை
செய்த பாவங்கள் வழி மறிக்குமோ ஐயப்பனே துணை
சன்னிதி வாசல் பிழை பொறுக்குமோ ஐயப்பனே துணை
அழுத குரலுக்கு விடை கிடைக்குமோ ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

சரணம் 3

போகும் பாதையிலே கல்லோ முள்ளோ ஐயப்பனே துணை
கும்மிருட்டிலே குண்டோ குழியோ ஐயப்பனே துணை
பந்தள நாட்டின் அடிமைகளுக்கு ஐயப்பனே துணை
பஞ்ச பூதங்கள் வழிமறித்தாலும் ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் 4

கூட்டம் கூட்டமாய் மலையில் ஏறுவோம் ஐயப்பனே துணை
கூட்டம் விட்டு பிரிந்த சாமிக்கு ஐயப்பனே துணை
தள்ளாடித் தள்ளாடி மலையில் ஏறுவோம் ஐயப்பனே துணை
கள்ளர் பயமோ காட்டு மிருகமோ ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

சரணம் 5

தேடும் விழிகளில் ஜோதி தெரியுமோ ஐயப்பனே துணை
பாடும் பாட்டிலே எத்தனை குறையோ ஐயப்பனே துணை
இருமுடி பாரம் சன்னதி சேர ஐயப்பனே துணை
சந்தனம் பூசும் சாமிமாருக்கு ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

சரணம் 6

வழியைக் காட்டும் குருசாமிக்கும் ஐயப்பனே துணை
பரவசமாக்கும் கன்னிசாமிக்கு ஐயப்பனே துணை
மாளிகை புரமும் மலையில் ஏறவே ஐயப்பனே துணை
ஆண்டுக்கு ஆண்டு சன்னதி வரவும் ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

ஸ்வாமியே சரணம் ஐயப்பா

**உனக்காக வாழ்வின்
இறுதி வரையிலும்
போராடும் ஒரு
உறவு தான் அப்பா
அதை நீ என்றுமே
உதாசீனப்படுத்திவிடாதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பனுக்கு மலையுண்டு

அப்பனுக்கு மலையுண்டு கைலாயம்
அன்னைக்கொரு மலையுண்டு ஏழுமலை
அண்ணனுக்கு மலையுண்டு பழனிமலை
ஐயப்பா உனக்குண்டு சபரிமலை
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4

என்னுடைய கழுத்து மணிமாலை
என்னுடைய கனவு சபரிமலை
என்னுடைய நாவு சரண மொழி
என்னுடைய வேதம் சரணமையப்பா
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4

எனக்குள்ளே இலட்சியம் சபரிமலை
எனக்குள்ளே இருப்பது சன்னிதானம்
எனக்குண்டு கதி பதினெட்டாம் படி
எனக்குண்டு மலைமேல் மகரவிளக்கு
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4

அப்பனவன் நாமம் நமசிவாயம்
அன்னையவள் நாமம் நாராயணா
அன்புத்தம்பி கோஷம் அரோகரா
ஐயப்பனின் கோஷம் சரணமையப்பா
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடு மலை கடந்து வந்தோம்

ஐயப்பா சுவாமி ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி ஐயப்பா

காடுமலை கடந்து வந்தோம் ஐயப்பா
உனைக் காண நாங்கள் ஓடி வந்தோம் ஐயப்பா
மாய வீடுதனை மறந்து வந்தோம் ஐயப்பா
சபரி வீடுதனை தேடி வந்தோம் ஐயப்பா

நெய் அபிஷேகம் பால் அபிஷேகம்
தேன் அபிஷேகம் சுவாமிக்கு சந்தனம்
பன்னீர் அபிஷேகம் எங்கள் ஐயப்ப சுவாமிக்கு (காடு)

ஏட்டினிலே எழுத வைத்தாய் ஐயப்பா
எங்கள் பாட்டினிலே எழுந்து வந்தாய் ஐயப்பா
நாங்கள் பேட்டை துள்ளி ஆடும் போது ஐயப்பா
நீ ஆட்டம் ஆடி வந்திடுவாய் மெய்யப்பா (காடு)

நீலவிழி கண்ணனுக்கும் நீறணிந்த ஈசனுக்கும்
பாலகனாய் அவதரித்த ஐயப்பா
வேலவனின் அருமைத்தம்பி காலமெல்லாம்
உனை வேண்டி நீலிமலை சபரிமலை
ஏறி வந்தோம் ஐயப்பா (காடு)

மணிகண்டா உன் கருணை அமுதப்பா
உன் புன்னகையில் புவனமெல்லாம் மயங்குதப்பா
மின்னும் காந்த மலையில் ஜோதி தெரியுதப்பா - அப்பா
சபரி மன்னவனே உன் மகிமை பெரியதப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாசிவன் மகனே

சதாசிவன் மகனே மகாகணபதியின் சோதர ஐயப்பா
எங்கள் பிதா நீயல்லோ உன்னை தேடி வரும்
அடிமை நாங்கள் அல்லோ உன் குழந்தை நாங்கள் எல்லோ

கூட்டம் விட்டுப் பிரிந்து தவிக்கிறோம்
செய்த பிழையென்ன தெரியலையே
வாட்டம் போக்கி சேர்த்து விட வேண்டும் ஐயனின்
கணக்கும் புரியலையே செய்த பாவம் என்ன தெரியலையே

ஹரிஹர சுதனே சரணம் சரணம் சுவாமி ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம் சரணம் ஐயப்பா
(சதாசிவன் மகனே)
குருவின் சொல்லையே அலட்சியமாக நினைத்ததால் வந்ததோ
விரத விதிகளை மீறியதாலே இந்நிலை வந்ததோ
சுவாமிமாரின் குல தகுதிக்கேற்ப நடத்தியதால் வந்ததோ
ஐயப்பன் மாரை அன்று ஐயப்பனாகவே
மதிக்க மறுத்ததால் நிகழ்ந்ததோ

கூட்டம் விட்டுப் பிரிந்து தவிக்கிறோம்
செய்த பிழையென்ன தெரியலையே
வாட்டம் போக்கி சேர்த்து விட வேண்டும் ஐயனின்
கணக்கும் புரியலையே செய்த பாவம் என்ன தெரியலையே
(ஹரிஹர சுதனே )
(சதாசிவன் மகனே)

கன்னிமார்களை துன்புறுத்தி பயம் காட்டியதால் வந்ததோ
தன்னிலை மறந்து ஆணவத் திமிராய்
திரிந்து அலைந்ததால் நிகழ்ந்ததோ
தொட்டதெற்கெல்லாம் தட்சணை என்றே
சுரண்டியதால் வந்ததோ
என் ஐயப்பா உனை வியாபாரமாக்கி
வயிறு வளர்த்ததால் நிகழ்ந்ததோ

(ஹரிஹர சுதனே )
(சதாசிவன் மகனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் விட்டு பிரிந்து தவிக்கிறோம்
சோதனை தந்தது போதுமப்பா
வாட்டம் போக்கி சேர்த்து விட வேண்டி
கறுப்பனை உடனே வரச்சொல்லப்பா
திக்கு தெரியாத காட்டுக்குள்ளே திசைக்கொரு
மூலையாய் பிரிந்து விட்டோம்
சரண விழிகளும் கேட்கலையோ என்
ஐயப்பா உனை தெரிந்து கொண்டோம்
ஐயப்பா உனை புரிந்து கொண்டோம்.

(ஹரிஹர சுதனே )
(சதாசிவன் மகனே)

## தேடுகின்ற கண்களுக்குள்

தேடுகின்ற கண்களுக்குள் ஓடிவரும் சுவாமி....
திருவிளக்கின் ஒளியினிலே குடி இருக்கும் சுவாமி....

வாடுகின்ற ஏழைகளின் வறுமை தீர்க்கும் சுவாமி....
வஞ்சம் இல்லா நல்லவர்க்கு அருள் புரியும் சுவாமி...

ஐயப்பசுவாமி ............. அருள்புரி சுவாமி..............
கண்ணனும் நீ கணபதி நீ கந்தனும் நீயே....
எங்கள் காவல்தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே...

அண்டம் எல்லாம் காத்தருளும் சக்தியும் நீயே....
என்னில் அன்பு வைத்து விதி வரைக்கும் ஓடி வந்தாயே....

ஐயப்ப சுவாமி.... இன்னும் அருள்புரி சுவாமி

தேடுகின்ற கண்களுக்குள் ஓடிவரும் சுவாமி....
திருவிளக்கின் ஒளியினிலே குடி இருக்கும் சுவாமி

ஐயப்ப....சுவாமி.... அருள்புரி சுவாமி

தந்தையுண்டு அன்னையுண்டு எந்தன் மனையிலே
ஒரு தம்பி மட்டும் பிறக்க வேண்டும் உந்தன் வடிவிலே....

அன்பு கொண்டு தந்தை தவம் செய்யும் பணியிலே
நாங்கள் ஆண்டு தோறும் வந்து நிற்போம் உந்தன் நிழலிலே

ஐயப்ப சுவாமி.... இன்னும் அருள் புரி சுவாமி...

தேடுகின்ற...
ஐயப்ப சுவாமி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடிவா ராஜா! நீ ஓடிவா சுவாமி

ஓடிவா ஐயப்பா ஓடிவா ஐயா
உன் பாதம் நான் தொழுவேன் ஓடிவா ஐயா (ஓடி வா)

மானே மரகதமே ஓடிவா ஐயா
மல்லிகைப்பூ செண்பகமே ஓடி வா ஐயா (ஓடி வா)

தேனே கற்கண்டே ஓடிவா ஐயா
தெவிட்டாத தெள்ளமுதே ஓடிவா ஐயா (ஓடி வா)

ஹே அச்சங்கோவில் அரசனே ஓடிவா ஐயா
ஆரியங்காவு ஐயாவே ஓடிவா ஐயா (ஓடி வா)

குளத்தூர் பாலகனே ஓடிவா ஐயா
குழந்தை மணிகண்டனே ஓடிவா ஐயா (ஓடி வா)

எருமேலி சாஸ்தாவே ஓடிவா ஐயா
எங்கள் குல தெய்வமே ஓடிவா ஐயா (ஓடி வா)

ஹே வன்புலிவாகனனே ஓடிவா ஐயா
வனத்தில் இருப்பவனே ஓடிவா ஐயா (ஓடி வா)

வில்லாளி வீரனே ஓடிவா ஐயா
வீரமணி கண்டனே ஓடிவா ஐயா (ஓடி வா)

பம்பையின் பாலகனே ஓடிவா ஐயா
பந்தள ராஜாவே ஓடிவா ஐயா (ஓடி வா)

ஹே நீலிமலை வாசனே ஓடிவா ஐயா
நித்திய பிரமச்சாரியே ஓடிவா ஐயா (ஓடி வா)

கருப்ப சாமியே ஓடிவா ஐயா
கடுத்த சாமியே ஓடிவா ஐயா (ஓடி வா)

கற்பூரப் பிரியனே ஓடிவா ஐயா
காந்தமலை ஜோதியே ஓடிவா ஐயா (ஓடி வா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதை சொன்ன கண்ணன்

கீதை சொன்ன கண்ணன் வண்ணதேரில் வருகிறான்.
கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்
வள்ளல் வருகிறான் அன்பு வள்ளல் வருகிறான்
வருகிறான், வருகிறான், வருகிறான்

நீலமேனி கோலம்காண கண்கள் மறுக்குமோ - அவன்
நிமிர்ந்ததோளும் விரிந்தமார்பும் நெஞ்சம் மறக்குமோ
தீரன்வடிவும் மீசை அழகும் வெற்றி ரகசியம் - அவன்
பாரதப்போர் நடத்திவைத்த யுக்தி அதிசயம்
அது முக்தி ரகசியம் (கீதை)

அல்லிக்கேணி குளத்தின் அருகில் வள்ளல் இருக்கின்றான்
அன்பு கொண்டு வருபவர்க்கு ஒன்று உரைக்கின்றான்
சொல்லும் அந்த எட்டெழுத்தில் சொர்க்கம் தோன்றுதே
சொல்ல சொல்ல ஐயன் தோற்றம் வானில் நீண்டதே
விஸ்வ ஷரூபம் தோன்றுதே

பார்த்தனுக்கு பாடம் சொன்ன கீர்த்தன் வருகிறான்
பசித்தவர்க்கு விருந்தளிக்க அமுதும் கொணர்கிறான்
காப்பதற்கு கையில் ஏந்தும் சங்கு சக்கரம் - அவன்
கரங்களுக்கு விளைவுதானே பிரம்மசூத்திரம்
நான்கு வேத சாஸ்திரம் (கீதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தனப்பூ வாசம்

சந்தனப்பூ வாசம் வீசுதையா அது
சபரிக்கு அழைக்குது வாரோமையா
காடுமலை தாண்டியே – சாமி
வந்தோம் பெரும் பாதையே

மாலையிட்டோம் எதுக்கு மணிகண்டா உனக்கு
பக்தி கொண்டு நடந்து வந்தோம் ஐயா
பள்ளிக்கட்டு சுமந்து வாரோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)

திந்தக்கத்தோம் பாட்டு கேட்குதையா
அது சன்னதிக்கு அழைக்குதுவாரோமையா

காவி உடை தாங்கியே – சாமி
வந்தோம் உனைக் காணவே காத்திருந்தோம் எதுக்கு
யாத்திரையாம் அதுக்கு முந்தி முந்தி நடந்து வாரோம் ஐயா
முன்பனியில் நடந்து வாறோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)

குங்குமப்பூ வாசம் வீசுதையா அது
எரிமேலி அழைக்குது வாறோமையா
கோட்டைப் படியேறியே
வந்தோம் பேட்டை விளையாடியே
வானவில்லை வளைத்து வண்ணங்களைக் குழைத்து
அங்கமெல்லாம் பூசி வாரோம் – ஐயா
அஞ்சு மலை தேடி வாரோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)

கற்பூர வாசம் வீசுதையா அது
சரங்குத்தி அழைக்குது வாரோமையா
வாளும் கதையும் ஏந்தியே வந்து நின்றோம் சரம் போடவே
கன்னிச்சாமி எமக்கு உங்கதுணை இருக்கு
பொன்னுபடி நடந்து வாரோம் ஐயா
உந்தனடி நினைந்து வாரோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்மணக்கும் வாசம் வீசுதையா – அது நீ அழைக்கும்
சேதியைக் கூறுதையா சாமி உனைக் காணவே
வந்த ஏழை முகம் பாருமே மகரந்த விளக்கு மணிகண்டா
உனக்கு அதைக் கண்டு மகிழ்ந்து நின்றோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)
சந்தனப்பூ வாசம் வீசுதையா – அது
சரணத்தின் மகிமையைக் கூறுதையா

## மோகினி தந்த

மோகினி தந்த மனமோகனன் நீயே - அந்த
மாமலையில் சிரிக்கின்ற மாணிக்கம் நீயே
மாதவத்தோர் வணங்கிடும் மங்கலம் நீயே
மகிஷியாலே சாபம் தீர்த்த மன்மதன் நீயே
மனமுருக சரணம் போட வருபவன் நீயே
மாதா பிதா குரு தெய்வம் எல்லாம் நீதானே

(மோகினி)

மழலையாக பம்பையில் பிறந்தவன் நீயே
மகிமையோடு பந்தளத்தில் வளர்ந்தவன் நீயே
அரண்மனைக்கு புலியின் மீது வந்தவன் நீயே
அம்மாவின் நோய் தீர்த்து வைத்த ஆண்டவன் நீயே

(மோகினி)

கரை காண முடியாத வேதம் நீ தானே
கலியுகத்தில் கண்கண்ட தேவன் நீ தானே
குருமுனியாய் குன்றின் மேல் கொலுவிருந்தாயே
பொல்லா மனம் நெய்யாய் தினம் உருகுதுன்னாலே
ஐயப்பா பொல்லா மனம் நெய்யாய் தினம் உருகுதுன்னாலே

(மோகினி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

## காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ஷரூபனை
இரு மூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்தஸ்வஷரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோமே 1

ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினந்தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே 2

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக 3

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருவாய்
பூரணை நாதனே வருக வருக
புண்ணியமூர்த்தியே வருக வருக 4

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக 6

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக 7

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப்பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே 8

சபரிகிரீசனை நினைத்தே நீரிடத்
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே கூறிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே 9

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்க ளெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடி பணிந்தேத்துவர் 10

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க 12

இருமூர்த்தி மைந்தன் என் இரு செவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முக பூஜ்யன் நாவினைக் காக்க 13

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க 14

வீரமணி கண்டன் விரல்களைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளை காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க 15

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப் பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா தொடையினைக்காக்க 16

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க 18

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க 19

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க 20

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழித்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க 21

கொடிய விலங்குகளும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய் 22

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பா 23
வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாந்தி பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணுகாமல் 24
என்றும் காப்பாய் எரிமேலி தேவா

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா 25

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச்சர்யமெனும் அறுபெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் 26

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம் லோபம் துன்மார்க்கம் கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய் 27

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதை செய்யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினமும் சொல்ல அருள் தருவாயே 28

நமஸ்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிஹர புத்ரா அன்பனே நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ 29

பொன்னம் பலத்துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியமா நமோ நமோ
கரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ 30

சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வ ரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 31

(பிரம்மாண்ட புராணத்தில் கேரளீய மஹாத்மியத்தில் ஸ்ரீ பரசுராமரால் ஐயப்பனைத் துதிக்கப்பட்ட கவசம்)

அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்

**மரணத்தை விட**
**கொடியது ஒன்று**
**உண்டு எனில்**
**அது அப்பாவின்**
**கண்ணீர் தான்....**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றெட்டு சரணக்கோவை

| | |
|---|---|
| ஓம் கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் உண்மைப்பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊழ்வினைகள் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எங்கள் குல தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏழைப்பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கலியுகவரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிவன்மால் திருமகனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அச்சங்கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் குளத்துப்புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்தம் நிறை மெய்ப்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் புலிப்பாலை கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் துளசிமணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இருமுடிப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எருமேலி தர்மசாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்திதரும் பேரழகே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் பேருத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் காளைகட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிர்வேட்டுப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அழுதமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இஞ்சிப்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரியிலந்தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஸ்ரீராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சக்தி பூஜை கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீபஜோதிக்கு திரு ஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் இப்பாச்சிக் குழியே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் சபரி பீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கருப்பண்ண சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் கடுத்தசாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கற்பூரப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் நாகராஜப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் அக்னிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சற்குருநாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மரஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் மங்களமூர்த்தியே | சரணம் ஐயப்பா |

எப்படி வேணுமானாலும்
வாழ்ந்து விட்டுப் போங்கள் – ஆனால்
பிறருடைய கஷ்டத்துக்கும்
வலிக்கும் மட்டும் காரணமாகிவிடாதீர்கள்.
அது உங்கள் வாழ்நாள் முழுவதும்
நிம்மதி இழக்க வைத்து விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பாடல்கள்

வேல் வேல் வேலவனே

வேல் வேல் வேலவனே வேலாயுதா – எங்கள்
வினைகள் எல்லாம் தீர்த்திடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
கந்தா கடம்பா வேலாயுதா –எங்கள்
கதிர்காம வேலவனே வேலாயுதா (வேல் வேல்)
திருச்செந்தூர் வேலவனே வேலாயுதா –எங்கள்
திருப்பரங்கித்திரனே வேலாயுதா (வேல் வேல்)
சோலமலை கிழவனே வேலாயுதா – எங்கள்
சொகுசுகார குமரனே வேலாயுதா (வேல் வேல்)
பழநிமலை முருகனே வேலாயுதா –எங்க
பழவினையை நீக்கிடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
சுவாமிமலை நாதனே வேலாயுதா
சுப்பிரமணிய சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)
திருத்தணிகை முருகனே வேலாயுதா –எங்கள்
திருமுருக வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

# அன்பருக்கு அன்பனே நீ

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக்குடி வேலவனே வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஒய்யாரி வள்ளிலோலா வா வா முருகா
ஓங்கார தத்துவமே வா வா முருகா
ஔவைக் குபதேசித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயபுரத்தாளே மாரியம்மா

சமயபுரத்தாளே மாரியம்மா அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா (சமயபுரத்தாளே)

மல்லிகைச் சரம் தொடுத்து மாலையிட்டோம் - அரிசி
மாவிளக்கு ஏற்றி வைத்து பொங்கலும் வைத்தோம்
துள்ளியே எங்கள் முன்னே வாருமம்மா
தூயவளே என் தாயே மாரியம்மா அம்மா (சமயபுரத்தாளே)

பட்டு பீதாம்பரத்தில் தாவணியும் - உனக்கு
பாவாடை சேலைகளும் கொண்டு வந்தோம்
எட்டுத் திசைகளையும் ஆள்பவளே -அம்மா
ஈஸ்வரியே என் தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)

கத்திக் கதறுகிறோம் கேட்கலையோ - தாயே
கல்லேதான் உன் மனமும் கரையலையோ
உலகமே ஆடுதம்மா உன் சிரிப்பிலே - எங்கள்
உமையவளே தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓசை மணி

ஓசைமணிக்காளியம்மா ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
சலங்கையொலி சலசலக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
பட்டாடை பளபளக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
மஞ்சள் முகம் மினுமினுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
தங்கமுகம் தளதளக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
செங்கைநீரும் கிலுகிலுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
மகிழ்ச்சியுடன் சிலுசிலுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
வேதங்கள் முழங்கிடவே ஓடிவாம்மா
வேதனைகள் தீர்த்திடவே ஆடிவாம்மா
செம்பவளப் பேரழகி ஓடிவாம்மா
செல்வமழை பொழிந்திடவே ஆடிவாம்மா
அருளமுது பருகுதற்கு ஓடிவாம்மா
ஆசிகளைத் தந்திடவே ஆடிவாம்மா
ஓசைமணிக்காளியம்மா ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்க கறுப்பு சாமி

எங்க கறுப்பு சாமி எங்க கறுப்பு சாமி
எங்க கறுப்பு சாமி எங்க கறுப்பு சாமி

அக்கினியில் பிறந்தவராம்
அரனாரின் மைந்தன் அவர் (எங்க கறுப்பு சாமி)

முன் கொண்டாய் காரனவன் - முன்கோபக்
காரன் அவன்
சந்தனப் பொட்டுக்காரன், சபரிமலை
காவல் காரன் (எங்க கறுப்பு சாமி)

சடைமுடிக் காரன் அவன், சுவாமிகளை காத்திடுவான்
சல்லடையை கட்டு வாரான், சாஞ்சி சாஞ்சி ஆடி வாரான்
(எங்க கறுப்பு சாமி)
வில்லுப்பாட்டு பாடிவாரான்,
விதவிதமாய் ஆடி வாரான் (எங்க கறுப்பு சாமி)

பந்தம் கையில் பிடிச்சு வாரான்,
பாரி வேட்டை ஆடி வாரான் (எங்க கறுப்பு சாமி)

அச்சங்கோவில் ஆண்டவர்க்கு எழிலாக இருப்பவனாம்
பதினெட்டுப் படிகளுக்கும் காவலாக இருப்பவனாம்
(எங்க கறுப்பு சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சையை கட்டி வாறான், கையறுவா காட்டி வாறான்
மீசையை முறுக்கி வாறான், முச்சந்தியில் நடந்து வாறான்
(எங்க கறுப்பு சாமி)

வில்லாளி வீரனுக்கு வீரமணி கண்டனுக்கு
இருமுடியை சுமக்கும்போது பாதுகாக்க வருபவனாம்
(எங்க கறுப்பு சாமி)

கற்பூர ஆணி முன்னே, கடவுளாக நின்றிடுவான்
கறுப்பு வேட்டி கட்டிக்கிட்டு, பாவங்களைப் போக்கிடுவான்
(எங்க கறுப்பு சாமி)

## மங்களம்

மாமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கே மங்களம்
தவமுனிவர் போற்றும் அந்த சன்னதிக்கு மங்களம்
இபமுகவன் முருகனுக்கு இளையவனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலிமிசையே பவனிவரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்
அன்புடனே அருள்புரியும் ஐயனுக்கு மங்களம்
அழகே உருவான எங்கள் மெய்யப்பனுக்கு மங்களம்
வெற்றி தரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்
பம்பை நிதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளன்பேர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்
கந்தர்மடம் தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
ஸ்ரீ ஐயப்பா மணிகண்ட சேவா சங்க மங்களம்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்
நித்திய சுப மங்களம் நித்திய சுப மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

திருப்பெருந்துறையில் அருளிச்செய்தது.

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமகத் தெமக்கருண் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுதோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருந்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான் பள்ளி யெழுந்தரு ளாயே.

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலரத்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள் நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்திரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நடக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர்அழுகையர்துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறுநின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துவணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மணவாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்(கு)
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில் திருவுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறியார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அம்மன்
# கற்பகவல்லி நின்

கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாய் அம்மா!

(கற்பகவல்லி)

பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட

(கற்பகவல்லி)

நீ இந்த வேளைதன்னில் சேயன் எனை மறந்தால்
நான் இந்த நாநிலத்தில் நாடுதல் யாரிடமோ
ஏன் இந்த மௌனம் அம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளும் அம்மா!

(கற்பகவல்லி)

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமா உனை நம்பினேன் அம்மா!

(கற்பகவல்லி)

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீஸ்வரி மாயே வாராய் இது தருணம்
பாகேஸ்வரி தாயே பார்வதியே இந்த
லோகேஸ்வரி நீயே உலகினில் துணையம்மா!

(கற்பகவல்லி)

அஞ்சன மை இடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம் - அருள்
தஞ்சம் என அடைந்தேன் தாயே உன் சேய் நான்
ரஞ்சினியே ரட்சிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா!

(கற்பகவல்லி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

எமது குடும்பத்தின் தலைவன், என்றும் எங்கள் மனதை விட்டகலாத ஒளி விளக்கு, கடந்த 11.12.2021 அன்று எம்மை விட்டுப் பிரிந்து அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து எமது ஆறாத்துயரில் பங்கு கொண்டு ஆறுதல் வார்த்தை கூறிய நல் உள்ளங்களிற்கும், தொடர்ந்து இரவு பகல் பாராது உரியநேரங்களில் உதவிய உறவுகளிற்கும், கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் வெளியிட்டோருக்கும், மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்ளங்களிற்கும் இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும், உதவிகள் ஆற்றிய சகல உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நடராசா தவக்குமார் அவர்களின் வம்சாவளி

❖ நடராசா + அன்னமுத்து ❖

❖ தேவராசா + செல்வராணி ❖

தவக்குமார் —— லலிதாரஞ்சினி

| | | |
|---|---|---|
| செல்வகுமார் | + | செல்வம் |
| விசயகுமார் | + | திருப்பதி |
| சாந்தகுமாரி | + | குணரத்தினம் |
| நந்தகுமார் | + | யமுனாதேவி |
| நந்தகுமாரி | + | ஜெயக்குமார் |
| சந்திரகுமார் | + | குமுதினி |
| தவக்குமாரி | + | சிவகுமார் |

பரணிதரன் + ஞானவேணி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தவரஞ்சினி | தவரஞ்சன் | தவரதி | தவரதன் | தவரூபன் | தசரதன் (வளர்ப்பு மகன்) |
| + | + | + | + | + | + |
| சுதாகர் | பிரியா | சுகந்தன் | வினோஜா | தர்சினி | தனுசியா |
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |
| சபீஸ் | நிதுசா | ஜஸ்னவி | மோனிஸன் | டிலைக்ஷன் | சகாப்தன் |
| கரீஸ் | டனுசியா | மானசி | | லிக்ஷனா | |

❖ அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உங்களைத் தேடியே...

அப்பா என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்தீர்கள்.
அழைக்கும் போதெல்லாம் அருகிருந்தீர்கள்.
அன்பினால் அரவணைத்து எமை வளர்த்தீர்கள்.
அறிவுரைகள் பல கூறிக் கற்பித்தீர்கள்.
பிள்ளைகளைப் பெற்றால் போதாது
பேணி வளர்க்க வேண்டுமென்றீர்கள்.
நீங்கள் யாதுமாகி நின்றீர்கள்.
எங்களின் சுமைகளையெல்லாம் நீங்களே சுமந்தீர்கள்.
மொத்தத்தில் சுமைதாங்கியாய் நின்றீர்களப்பா!
நொடிப்பொழுதில் எமை வேதனையில் தவிக்கவிட்டு
மறைந்தீர்களே அப்பா!
தாங்க முடியாத வலியால்
உயிராய் நேசித்த உங்களை
கண் முன்னே பிரிந்தது கொடிய வலியாகிப் போனதப்பா.
ஓராண்டு முடிந்தும் – உங்களுடன் நாம்....
ஆண்டவன் அடியிருங்கள்
அனுதினமும் நாம் துதிப்போம்.

– பிள்ளைகள்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழினி பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579